# 27. அயலாவதுமென்னே.

***கலிவிருத்தம்.***

**சீ**ரிய வந்தணர் சிந்தையி னுள்கோர்
காரிய நன்னெறி காதன்ம லிந்துன்
பேரிய வெற்கும் வழங்கிய பின்னென்
ஆரிய வின்றய லாவது மென்னே. 1

---

வடையும் மாவிரதிகள், சடை எலும்பு தரித்தன் முதலிய கொள்கையினையுடைய ரென்ப. இம்மத நூலும், அடியில் வரு பாசுபத கபாலிக நூல்களும் போந்த வித்தை மாயை கால மென்னுந் தத்துவங்களில் வைகிய 3 - உருத்திரராற் சொல்லப்பட்டமையால் அம்மதத்தவர் அத்தத்துவங்களையே கதியாயடைபவராயினா ரென்ப. மற்றை வாதிகளும் அவரவர் நிறுவிக்கூறு முடிவு, எவ்வெத் தத்துவஞ் சார்கின்றதோ அதனை அதனையே கதியாக அடைவரென்பது இங்ஙனுணர்த்திய வாற்றானேயே அறியக்கிடக்கின்றது.

8. **நறுமாயை** = சுத்தமாயை.

**ச**த்திய மேயுரை யென்றருள் சாரும்
புத்தி யுரைத்து மறைந்து புலங்கூர்
நித்திய வன்பி னிறீஇய பின்னென்
அத்த வெனக்கய லாவது மென்னே. 2

**பீ**தி விளிந்து பெருந்தெரு ளூற்றோர்
கோதி லரும்பொறி கோட லெனக்கன்
றோதிய பின்பெனை யுண்குக னாமென்
ஆதி யெனக்கய லாவது மென்னே. 3

**ம**மதை யவித்தருண் மல்கி விளங்கோர்
நிமல நெறிக்குறி நீட்டிய பின்றைப்
பிமர மறுப்பர் பிரானெனு மென்னார்
அமல வெனக்கய லாவது மென்னே. 4

**மெ**ய்யென வுள்ளி விழைந்த வனைத்தும்
பொய்யென வுள்ளி யிகந்து புணர்ந்தே
உய்யும் வரம்பை யுகந்த பினேயென்
ஐய வெனக்கய லாவது மென்னே. 5

**எ**ன்புரி வுன்புரி வென்று தெரிந்தாள்
உன்புரி வென்புரி வென்ப துணர்ந்தும்
இன்பரு ணன்னடை யென்ப தணைந்தும்
அன்பர வின்றய லாவது மென்னே. 6

**எ**ண்ணிடு மெண்ண மறிந்தரு ளின்பை
நண்ணி யிருந்து நறும்பய நாரால்
கண்ணொழு கும்மலர் கண்ட பினேயென்
அண்ண வெனக்கய லாவது மென்னே. 7

---

2. சத்தியத்தையே சொல்வாயாக வென்று தெய்வங் கட்டளையிட்டருளிய திதன்கண் வெளிப்படல் கவனிக்கற்பால தாகலின், இந்நூலாசிரியர் பாடல்கள் சத்தியமே சாற்று மென்க.

4. **பிரமரம்** 'பிமரம்' என மரீஇயிற்று; **பிரமரம்** = அசைவு.

6. **புரிவு** = அன்பு. 7. **அலர்** = நீர்.

**கோ**ளரி யத்தி குலைந்திற மோதா
மூளை புசித்த லுறழ்ந்திருண் மோதும்
வாளருள் வட்டை வழங்கிய பின்னே
ஆளிறை யெற்கய லாவது மென்னே. 8

**வெ**ந்தழி வுற்றதும் வேத லிலாதும்
நந்திய சுத்த நறும்பத மொத்தோர்
உந்தியி னிற்க வுரைத்த பினேயென்
அந்தண வெற்கய லாவது மென்னே. 9

**க**சடு துறந்துய் கருத்தை யிசைத்துன்
நிசநெறி யின்க ணிறுத்திய பின்பு
நசைமை யகன்ற வணாமலை நாதன்
அசல வெனக்கய லாவது மென்னே. 10